மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செய்யூர்.
முன்னிலை:– **திருமதி. C.M. அமராவதி, M.L..,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், செய்யூர்.
2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 15– ம் நாள் புதன்கிழமை
ஸ்ரீபராபவ வருடம் ஆனி மாதம் 31– ம் நாள்
**<u>ஆண்டுப் பட்டிகை வழக்கெண்.159/2025</u>**

**<u>CNR NO –TNCG16–000809–2025</u>**

**அரசுக்காக,**
காவல்  உதவி ஆய்வாளர்,
ஜி6 சித்தாமூர் காவல் நிலையம்,
குற்ற எண்.78/2022. ... குற்றமுறையிடுவர்..

//எதிர்//

| | |
|---|---|
| 1. | வேல்முருகன், த/பெ. குப்புசாமி, வயது. 38 |
| 2. | நடராஜன், த/பெ. சின்னதுரை, வயது. 37 |
| 3. | கமல், த/பெ. குப்புசாமி, வயது. 31 |
| 4. | பரமசிவம், த/பெ. குப்புசாமி, வயது. 41 |
| 5. | மணிகண்டன், த/பெ. குப்புசாமி, வயது. 28 |
| 6. | சுஜித்தா, க/பெ. வேல்முருகன், வயது. 37 |

...எதிரிகள்....

## <u>Case Summary</u>

| Sl. No. | Particulars | Report |
|---|---|---|
| 1 | The Period of remand of the accused | (i) 1, 3 to 6 Accused Anticipatory bail on 13.04.2022 and released on bail 21.04.2022.<br>(iii) 2$^{nd}$ accused remanded on 04.04.2022 and released on court bail 07.04.2022. |
| 2 | The date of filing of the complaint/final report in the Court | Final Report filed and Taken cognizance on 29.08.2025. |

| | | |
|---|---|---|
| 3 | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4 | The date of questioning of the accused under Sections 251, 263, 269 and 274 of BNSS 2023, as the case may be | 1 to 6th Accused 1st questioned On 21.05.2026. |
| 5 | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 BNSS of the Code: | MP No.1/2026 – Petition under Section 359 BNSS filed and dismissed on.15.06.2026.<br>MP No.2/2026 – Petition under Section 348 BNSS filed and allowed on. 02.07.2026. |
| 6 | Date of examination in-chief and cross- examination of a witness: | PW1 - 15.06.2026 Chief and cross<br>PW2 - 15.06.2026 Chief and cross<br>PW3 - 15.06.2026 Chief and cross<br>PW4 - 15.06.2026 Chief and cross<br>PW5 - 02.07.2026 Chief and cross |
| 7 | Date of examination of the accused under Section 351 BNSS of the Code: | 15.07.2026. |
| 8 | Details of abscondence of an accused and his appearance/productions, as the case may be: and NBW Pending /recalled | NIL |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

இவ்வழக்கு கடந்த 29.08.2025 ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து, இன்று குற்றம் முறையிடுவோர் தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1 திரு. கார்த்திக், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. M. சதீஷ், திரு. K.

தமிழரசு, திரு. S. மணிகண்டன், திரு. N. ஜெயகுமார், திரு. J. மாதவன், அவர்கள் முன்னிலையாகியும், இன்று என் முன் இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**தீர்ப்புரை**

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்:-**

**1.** கடந்த 02.04.2022 ம் தேதி மாலை 6.00 மணியளவில் முதுகரை கிராமத்தில் 1ம் எதிரி முன்விரோதம் காரணமாக புகார்தாரர் பரிமளா என்பவரின் மகன் தமிழரசன் என்பவரை தேவிடியா பையா, ஓத்தா என அசிங்கமாக பேசியதன் தொடர்ச்சியாக, இரவு 7.00 மணியளவில் சாட்சி 1 பரிமளா, சாட்சி 4 இளையராஜா, சாட்சி 5 சுமன், சாட்சி 6 தமிழரசு ஆகியோர்களுடன் 1 முதல் 6 வரையான எதிரிகள் வீண் தகராறு செய்தும், 3, 4, 5, 6 ம் எதிரிகள் அனைவரும் சாட்சி 5 சுமன் என்பவரின் கண்ணத்தில் கட்டையால் அடித்தும், 1 மற்றும் 2ம் எதிரிகள் இளையராஜா மற்றும் சுமன் என்பவர்களை இத்தோடு செத்து போங்கடா என கத்தியால் தாக்கி, இருவருக்கும் சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 6ம் எதிரி ஜெயந்தி என்பவரை கல்லால் தாக்கி அவருக்கு காயத்தை ஏற்படுத்தியதாகவும், 4ம் எதிரி சுமன் என்பவரை கல்லால் தாக்கி காயம் ஏற்படுத்தியதாக 1 மற்றும் 2ம் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2) IPC ன் படியும், 3 முதல் 6ம் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324 IPC ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றங்கள் புரிந்துள்ளதாக ஜி6 சித்தாமூர் காவல் உதவி ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பபட்டு, அழைப்பாணையின் பேரில் எதிரிகள்

நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல்களும் பா.கு.பா.ச. பிரிவு 231 ன் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றத்தினை மறுத்தார்கள். எனவே, இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், 1 மற்றும் 2ம் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2) IPC ன் படியும், 3 முதல் 6ம் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324 IPC ன் படியும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** அரசு தரப்பில் 1 முதல் 10 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அதில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் மட்டுமே விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. பட்டியல் சாட்சிகள் 2, 3, 6, 8 மற்றும் 9 வரையான சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்காமல் விலக்கி கொள்ளப்பட்டனர். சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>அரசு தரப்பின் சுருக்கம்</u> :–

**5.** கடந்த 02.04.2022 ம் தேதி மாலை 6.00 மணியளவில் முதுகரை கிராமத்தில் 1ம் எதிரி முன்விரோதம் காரணமாக புகார்தாரர் பரிமளா என்பவரின் மகன் தமிழரசன் என்பவரை தேவிடியா பையா, ஓத்தா என அசிங்கமாக பேசியதன் தொடர்ச்சியாக, இரவு 7.00 மணியளவில் பரிமளா, இளையராஜா, சுமன், தமிழரசு ஆகியோர்களுடன் 1 முதல் 6 வரையான எதிரிகள் வீண் தகராறு செய்தும், 3, 4, 5, 6 ம் எதிரிகள் அனைவரும் சுமன் என்பவரின் கண்ணத்தில் கட்டையால் அடித்தும், 1 மற்றும் 2ம் எதிரிகள் இளையராஜா மற்றும் சுமன் என்பவர்களை இத்தோடு செத்து போங்கடா என கத்தியால் தாக்கி, இருவருக்கும் சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், 6ம் எதிரி ஜெயந்தி என்பவரை கல்லால் தாக்கியும், 4ம் எதிரி சுமன் என்பவரை கல்லால் தாக்கியும் காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்.

**6.** அதை தொடர்ந்து, கடந்த 03.04.2022 அன்று காலை 11.30 மணியளவில் புகார்தாரர் பரிமளா, க/பெ. துரை, முதுகரை கிராமம் என்பவர் ஜி6 சித்தாமூர் காவல் நிலையம் ஆஜராகி தான் கையொப்பமிட்ட அ.சா.ஆ.1 புகார் கொடுத்தார். அவர் கொடுத்த புகார் அ.சா.ஆ.2 ஐ அன்று காவல் நிலைய பொறுப்பில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. மாரியப்பன் என்பவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காவல் நிலைய குற்ற எண்.78/2022, –ல் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2) IPC – ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஐ பதிவு செய்தார். பின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிகண்டன் மற்றும் சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஐ தயார் செய்தார். பின் இவ்வழக்கின் சாட்சிகள் பரிமளா, இளையராஜா, சுமன், தமிழரசன், ரவி மற்றும் பார்வை மகசர்

சாட்சிகளான மணிகண்டன், சதீஷ்குமார் ஆகியோர்களை ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களான சுமன் மற்றும் இளையராஜா ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெய்கணேசன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்களை பெற்றார். இவ்வழக்கின் 2ம் எதிரியை கடந்த 03.04.2022 அன்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். இவ்வழக்கின் மற்ற எதிரிகள் முன்பிணை பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்தனர். இறுதியாக இவ்வழக்கில் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2) IPC ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**7.** இவ்வழக்கில் புகார்தாரர் திருமதி. பரிமளா, அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். திரு. இளையராஜா, அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். திரு. சுமன், அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். திரு. ரவி, அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். திரு. பாலமுருகன், ஜி6 சித்தாமூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர், அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**8.** இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி. பரிமளா, என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், புகாரை ஒத்து சாட்சியம் அளிக்காமல், தானும் ஆஜர் எதிரிகளும் இவ்வழக்கு சம்பவம் குறித்து சமாதானமாக சென்று விட்டதால், இந்நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாகவும், சுமார் 5 வருடங்களுக்கு முன்பு சண்டை நடந்தபோது சுமன், இளையராஜா மற்றும் ரவி ஆகியோர்களுக்கு காயம்

ஏற்பட்டதாகவும், சம்பவ இடத்தில் கூட்டமாக இருந்ததால் தற்போது யார் தன்னை அடித்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும் தெரிவித்து, அவர் அரசு தரப்பை ஆதரிக்காமல் பிறழ்ந்து சாட்சியம் அளித்துள்ளார்.

**9.** இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் அனைவரும் தங்களது நீதிமன்ற சாட்சியங்களில் தாங்களும், ஆஜர் எதிரிகளும் இவ்வழக்கு சம்பவம் குறித்து சமாதானமாக சென்று விட்டதால், இந்நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாகவும், 5 வருடங்களுக்கு முன்பு சண்டை நடந்ததால் தங்களை யார் அடித்தார்கள் என்று தங்களுக்கு ஞாபகம் இல்லை என்று தெரிவித்து அவர்களும் அரசு தரப்பிற்கு பிறழ்ந்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**10.** இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரியான திரு.மாரியப்பன் என்பவருக்கு பதிலாக கூடுதல் சாட்சியாக விசாரிக்கக் கோரி பா.கு.பா.ச. பிரிவு 348– ன் கீழ் மனு அளித்துள்ளதின் பேரில் அ.சா.5 ஆக திரு. பாலமுருகன், சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 03.04.2022ம் தேதி காலை 11.30 மணியளவில் அன்று காவல் நிலைய பொருப்பில் இருந்த திரு. மாரியப்பன், காவல் உதவி ஆய்வாளர் என்பவர் திருமதி. பரிமளா, க/பெ. துரை, என்பவரிடம் புகாரைப் பெற்று, காவல் நிலைய குற்ற எண்.78/2022 –ல் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2) IPC– ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததைப் பற்றியும், சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததைப் பற்றியும், இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு

செய்து, அவர்களிடமிருந்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ்களை பெற்று, இறுதியாக இவ்வழக்கில் விசாரணை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததைப் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11.** இவ்வழக்கில் அரசுத் தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சியப் பகுதிகளை எடுத்துரைத்து, பா.கு.பா.ச. பிரிவு 351 (1) (b)–ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோது, எதிரிகள் அரசுத் தரப்பு சாட்சி கூறுவதை மறுத்து, தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கூறினார்கள். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

**12.** இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**13**. இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**14.** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மற்றும் காயம்பட்ட நபர்களான அ.சா.2 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் அனைவரும், இவ்வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்காமல், தாங்களும் ஆஜர் எதிரிகளும் இவ்வழக்கு சம்பவம் குறித்து சமாதானமாக போவதாகவும், சம்பவத்தன்று கும்பலாக இருந்ததால் யார் யாரை அடித்தார்கள் என்று தங்களுக்கு ஞாபகம் இல்லை என்றும், தெரிவித்து அவர்கள் அரசு தரப்பிற்கு பிறழ்ந்து சாட்சியம் அளித்துள்ளார்.

**15.** மேலும் அ.சா.1ம், இவ்வழக்கின் எதிரிகளும் சமாதானமாக போவதாக தெரிவித்து பா.கு.பா.ச. பிரிவு 359 –ன் கீழ் இந்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளார்கள். எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147,

148, 294(b), 324, 506(2) IPC – ன் கீழ் சமாதானமாக போக முடியாத குற்றங்கள் என்பதால் இந்நீதிமன்றம் மேற்படி மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

**16**. மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்ததில் இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 மற்றும் காயம்பட்ட சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் அனைவரும் இவ்வழக்கு சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்காமல், பிறழ் சாட்சிகாளக மாறி சாட்சியங்கள் அளித்துள்ள நிலையில், இவ்வழக்கில் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட திரு. பாலமுருகன், ஜி6 சித்தாமூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் என்பவரின் சாட்சியத்தை மட்டும் அடிப்படையாக வைத்துக் கொண்டு, எதிரிகள் மீதான குற்றங்கள் மெய்பிக்கப்பட்டதாக கருத இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கின் எதிரிகள் அ.சா.2 முதல் அ.சா.4 வரையான சாட்சிகளை கட்டை மற்றும் கற்களால் அடித்ததாக அரசு தரப்பில் தெரிவித்த போதிலும், அந்த கட்டை மற்றும் கற்களைக் கைப்பற்றி இவ்வழக்கில் சான்று பொருள் ஆவணங்களாக சமர்பிக்காததும் இவ்வழக்கில் தொய்வை ஏற்படுத்துகிறது.

**17**. எனவே, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>முடிவாக:–</u>**

**18**. மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, 1 மற்றும் 2ம் எதிரிகள் மீது

வனையப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(2) IPC ன் படியும், 3 முதல் 6 ம் எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 324 IPC–ன் படியான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபுற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, 1 முதல் 6 வரையான எதிரிகளை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை பா.கு.பா.ச. பிரிவு 271 (1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**19**. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால், சொத்து குறித்து எந்த உத்தரவும் இல்லை.

**20**. இவ்வழக்கின் எதிரிகள் ஏற்கனவே பிணையில் சென்றுள்ள நிலையில் மேல்முறையிட்டுக் காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல் முறையீடு எதுவும் செய்யவில்லை எனில் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரிகளின் பிணைப் பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 15 – ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

AMARAVATHI
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by AMARAVATHI
Location: Cheyyur
Date: 2026.07.15 18:16:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
செய்யூர்.

**<u>பின் இணைப்பு</u> –**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் அட்டவணை</u> –**

| சாட்சிகள் | பெயர்கள் | சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. பரிமளா | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. இளையராஜா | கண்ணுற்ற சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.3 | திரு. சுமன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. ரவி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | திரு. பாலமுருகன் | ஜி6, சித்தாமூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர். |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** –

| ஆவண வரிசை | சான்றாவணங்கள் | யாரால் குறியீடு செய்யப்பட்டது | அ |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள புகார்தாரரின் கையொப்பம் | அ.சா.1 | |
| அ.சா.ஆ.2 | புகார் மனு | அ.சா.5 | |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 | |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் | அ.சா.5 | |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் | அ.சா.5 | |
| அ.சா.ஆ.6 | அ.சா.3 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் | அ.சா.5 | |
| அ.சா.ஆ.7 | அ.சா.2 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் | அ.சா.5 | |

**<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>**– இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுப் பொருள்</u>** – இல்லை

AMARAVATHI

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by AMARAVATHI
Location: Cheyyur
Date: 2026.07.15 18:16:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
செய்யூர்.

**<u>NOTE:</u>**

1. No witnesses were retained for more than three times.
2. Accused is in bail during the period of trial.
3. The result of this case intimated to police.